**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - **641 003**

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: **94890 56730**

தொலைபேசி: **0422 - 6611302**
நிகரி: **0422 - 2431821**
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: **10.02.2023**

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் சம்பா கோதுமை வயலில் விவசாயிகளுக்கு பயிற்சி

அகில இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப்பல்கலைக்கழகமும் இணைந்து 08.02.2023 அன்று வேளாண்மைத் துறை மற்றும் விவசாயிகள் நலத்துறையின் ஒத்துழைப்புடன் கோதுமைவயல் விழா ஏற்பாடு செய்யப்பட்டது. கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் இருந்து மொத்தம் 75 விவசாயிகள் கலந்துகொண்டனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், அகில இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனம், கோதுமை மண்டல நிலையம், வெலிங்டன்னுடன் இணைந்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள கிழக்குப் பண்ணையில் கோதுமைப்பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ***டிரிட்டிகம் டைக்கோகம்*** மற்றும் ***டிரிட்டிகம் ஈஸ்டிவம்*** போன்ற கோதுமை இரகங்கள் 4.00 ஏக்கர் நிலப்பரப்பில் நவம்பர் மாத கடைசி வாரத்தில் விதைக்கப்பட்டது. முனைவர் எஸ்.பன்னீர் செல்வம், பேராசிரியர் மற்றும் தலைவர், உழவியல் துறை மற்றும் முனைவர் எம். சிவசாமி, முதன்மை விஞ்ஞானி (அகில இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனம்), கோதுமை மண்டல நிலையம், வெலிங்டன் ஆகியோரின் கண்காணிப்பில் சமீபத்திய அறிவியல் நடைமுறைகளைப் பின்பற்றி கோதுமை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் தமிழ்நாடுவேளாண்மைப்பல்கலைக்கழக துணைவேந்தர், முனைவர் வெ.கீதாலட்சுமி அவர்கள், கோவை மாவட்ட ஆட்சியர் திரு.கிரந்தி குமார் பதி இ.ஆ.ப., அவர்கள் மற்றும் முனைவர் விக்ராந்த் சிங், இணை இயக்குனர், கோதுமை மேம்பாட்டு இயக்ககம், குருகிராம், ஹரியானா ஆகியோர் கலந்துகொண்டனர்.

அகில இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனம் விஞ்ஞானிகள் முனைவர் எம். சிவசாமி, முனைவர் பி. ஜெயபிரகாஷ் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப்பல்கலைக்கழக விஞ்ஞானிகள் முனைவர் எம். ரவிந்திரன், ஆராய்ச்சி இயக்குனர், முனைவர் எம்.கே. கலாராணி,

பயிர் மேலாண்மை இயக்குனர், முனைவர் என்.செந்தில், தாவர மூலக்கூறு உயிரியல் இயக்குனர் மற்றும் முனைவர் எஸ். பன்னீர்செல்வம், பேராசிரியர் மற்றும் தலைவர், உழவியல் துறைத் தலைவர் ஆகியோர் பங்கேற்றனர். இந்நிகழ்ச்சியில் திருமதி. கே. முத்துலட்சுமி, வேளாண் இணை இயக்குனர், கோவை மற்றும் முனைவர் குமாரவடிவேலு, அகில இந்தியஆராய்ச்சிநிறுவனம், வேளாண் அறிவியல் நிலையம் அவர்களும் கலந்து கொண்டனர்.

நீரிழிவு நோயாளிகளுக்கு உணவில் கோதுமையின் பங்கு, கோதுமை விதை உற்பத்தியை வலுப்படுத்துதல் மற்றும் அகில இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனம் உடனான தொடர்பைப் பற்றி துணைவேந்தர் வலியுறுத்தினார், மேலும் கோதுமை சார்ந்த ஆராய்ச்சியை வலுப்படுத்த வலியுறுத்தினார்.

பழங்கால உணவு முறையில் கோதுமை ஒரு இடத்தைப் பிடித்துள்ளது என்று தமிழ்நாடு வேளாண்மைப்பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குனர் தெரிவித்தார். கோதுமை ஆராய்ச்சியை வலுப்படுத்துவது பற்றியும், அகில இந்திய வேளாண்மை ஆராய்ச்சிநிறுவனம் உடனான கூட்டு ஆராய்ச்சிக்கு தமிழ்நாடு வேளாண்மைப்பல்கலைக்கழகம் உதவும் என்றும் அவர் எடுத்துரைத்தார்.

பயிர் மேலாண்மை இயக்குனர், கோதுமையின் உற்பத்தி மற்றும் உற்பத்தியை அதிகரிப்பதற்கான ஆராய்ச்சியில் கவனம் செலுத்தவும், தமிழகத்தில் கோதுமை சாகுபடிபரப்பை விரிவுபடுத்த எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கவும் வலியுறுத்தினார்.

ஹரியானாவின் குருகிராமில் உள்ள கோதுமை மேம்பாட்டு இயக்ககத்தின் இணை இயக்குனர் முனைவர் விக்ராந்த் சிங், கோதுமை உற்பத்தி முறையுடன் ஒப்பிடுகையில் எந்த ஒரு இரசாயன பூச்சி மற்றும் நோய் மேலாண்மையும் இல்லாமல் தமிழ்நாட்டில் கோதுமைப் பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளதை பாராட்டினார். இயற்கை சாகுபடிமுறையின் கீழ் தரமான கோதுமை உற்பத்தி சாத்தியமாகும் என்பதை அவர் உறுதி செய்கிறார். மேலும், வடமாநிலங்களின் கோதுமை விதைகளுக்கு அதிக தேவை இருப்பதாகஅவர் வலியுருத்தினார். எனவே, விதை தேவையை பூர்த்தி செய்ய தமிழகத்தில் விதை உற்பத்தி நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், தமிழக விவசாயிகள் மத்தியில் கோதுமையை பிரபலப்படுத்துவதற்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் எடுத்துள்ளமுயற்சிகளைஅவர் பாராட்டினார்.

உழவியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர், தாமதமாக கோதுமை விதைக்கப்பட்ட நிலை குறித்த தகவல்களை அளித்து, இந்த ஆண்டு கோதுமை வளர்ச்சிக்கு ஏற்ற காலநிலைகாரணமாக கோதுமைப் பயிரின் வளர்ச்சி நன்றாக இருப்பதாக விளக்கினார். மேலும், கோதுமைசாகுபடி செய்ய குறைந்த இடுபொருட்கள் மற்றும் சாகுபடிசெலவு ஆகும் எனதெரிவித்தார்.

அகில இந்தியவேளாண்மை ஆராய்ச்சி நிறுவன விஞ்ஞானிமுனைவர் எம். சிவசாமி, கோதுமைக்கான சமீபத்திய உற்பத்தி தொழில்நுட்பங்கள், கோதுமையின் கலப்பின

தொழில்நுட்பங்கள் மற்றும் கோதுமை இரகமான HW*1098*-இன் தனிச்சிறப்பு குறித்தும், தமிழகத்தில் கோதுமை உற்பத்திக்கான காலநிலை குறித்தும் மற்றும் தற்போது நடந்துவரும் ஆராய்ச்சிகள் குறித்தும் விளக்கினார்.

குறைந்த தண்ணீர் தேவை மற்றும் இலாபம் தரும் பயிர்களை விவசாயிகள் பயிரிட வேண்டும் என்று கோவைமாவட்ட ஆட்சியர் திரு. கிராந்திகுமார் பதி, மாவட்ட ஆட்சியர்அவர்கள் வலியுறுத்தினார். விவசாயிகள் கோதுமை மற்றும் பிற பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்த்தித்திறனை அதிகரிக்க அகில இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை மற்றும் வேளாண் அறிவியல் நிலையங்களின் சேவையைப் பயன்படுத்தவேண்டும் என வலியுறுத்தினார்.

முற்போக்கு கோதுமை விவசாயிகள், கோதுமை சாகுபடிகுறித்த தங்கள் அனுபவங்களை கூட்டத்தில் பகிர்ந்துகொண்டனர்.

சிரஞ்சீவி அக்ரோ இன்டஸ்ட்ரீஸ், கோயம்புத்தூர் தலைமை நிர்வாக அதிகாரி திரு. டி. ராஜேஷ், கோதுமை சந்தைப்படுத்துதல் மற்றும் கடந்த கால, நிகழ்கால மற்றும் எதிர்கால சூழ்நிலைகளைப் பற்றி தெளிவாக விவரித்தார். இறுதியாக, முதன்மை விஞ்ஞானி முனைவர் பி. ஜெயபிரகாஷ் நன்றியுரை வழங்கினார்.

விஞ்ஞானிகள் முனைவர். கே. திருக்குமரன், முனைவர் எஸ்.பி. சங்கீதா, முனைவர். வி. மணிவண்ணன் மற்றும் முனைவர் ஜி. பிரபுகுமார் ஆகியோர் கோதுமை ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். மேலும், எதிர்வரும் பருவத்தில் கோதுமை விதைகளை விவசாயிகளுக்கு விற்கப்படவுள்ளது.

**மக்கள் தொடர்பு அலுவலர்**